**செய்தி வெளியீடு எண்: 743 நாள்: 10.09.2008**

# செய்தி குறிப்பு

## சென்னை–35, நந்தனம், அரசு கலைக் கல்லூரியில் 12.09.2008 முதல் 14.09.2008 முடிய வேலை வாய்ப்பு முகாம்

தமிழ்நாடு சட்டமன்றத்தில் உயர் கல்வி மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு உயர்கல்வி அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் வேலை வாய்ப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம் மையத்தின் மூலம் அரசு கல்லூரிகளில் வேலை வாய்ப்பு முகாம் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சென்னை–35, நந்தனம், அரசு கலைக் கல்லூரி, சதர்லேண்ட் க்ளோபல் செர்வீசஸ் (Sutherland Global Services) என்னும் நிறுவனத்துடன் இணைந்து 12.09.08 முதல் 14.09.08 வரை BPO பணிகளுக்கு தகுந்த மாணவ / மாணவியரைத் தெரிவு செய்வதற்கு வேலை வாய்ப்பு முகாம் நடத்த உள்ளது.

12.09.08 அன்று நடத்த இருக்கும் வேலை வாய்ப்பு முகாம் சென்னை மற்றும் புற நகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள பொன்னேரி, செங்கல்பட்டு மற்றும் திருத்தணி அரசு கல்லூரிகள் உள்ளிட்ட 9 அரசுக் கல்லூரிகளில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியருக்கான சிறப்பு முகாமாக நடத்தப்பட உள்ளது. மேற்குறிப்பிட்ட 9 அரசு கல்லூரி முதல்வர்களுக்கும் தங்கள் கல்லூரிகளில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியர்க்குத் தகவல் அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த சிறப்பு வேலை வாய்ப்பு முகாமில் 5000–க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9